**Sub Court, Eraniel**

O.S. No.137/2023
Date: 28.01.2026
ம.சா.1 - திரு.ரெதீஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பெயின்டிங் வேலை செய்கிறேன். எனது தகப்பனார் Co operative society ல் supervisor ஆக வேலை பார்த்தார் என்றால், சரிதான். எனக்கு முன்பு அவருக்கு 3 ஆண் பிள்ளைகள் பிறந்து, இறந்து விட்டனர் என்ற விபரம் எனக்குத் தெரியும். அந்த பிள்ளைகள் இறந்த பிறகு எனது தகப்பனார் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு அந்த Supervisor வேலையை விட்டு விட்டார் என்ற விபரம் எனக்குத் தெரியும். அதன் பிறகு அவர் வேலை எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல. வீட்டில் பசு மாடு வைத்து விவசாயமும் செய்து வந்தார். அவருக்கு சொந்தமாக 3 வயல்கள் இருந்தன. 60 சென்ட் நிலத்தில் அவருக்கு தென்னை மரங்கள் இருந்தன. இவ்வாறு 3 வயல்கள் மற்றும் 60 சென்ட் நிலம் ஆகிய சொத்துக்கள் அவருக்கு இருந்தது பற்றி ஆதார ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலாது. எனது தகப்பனாருக்கு சொந்தமாக அவ்வாறு வயல்கள் இல்லை என்றாலும், அவர் விவசாயம் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. பசுமாடுகளை எனது தாயார் தான் கவனித்துக் கொண்டார் என்றாலும், எனது தகப்பனார் அவ்வாறு வேலை எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல. வாதியான எனது சகோதரி லொரேட்டா MA Lit. படித்திருந்தார். 1ம் பிரதியான அனிதா ஷெர்லின் B.Sc முடித்து விட்டு Library ல் சம்பந்தமாக ஏதோ படித்திருந்தார். நான் ITI படித்திருக்கிறேன். நான் திருநெல்வேலி, குருவி குளத்தில் ITI படித்தேன். எனது தயாரின் உடன் பிறந்த சகோதரி தங்கம் திருநெல்வேலியில் ஆசிரியையாக வேலை பார்த்தார் என்றால், சரிதான். அவருடைய கணவரும் ஆசிரியர் என்றால், சரிதான். எங்கள் 3 பேரையும், எனது அம்மாவின் சகோதரியான தங்கம் தான் படிக்க உதவிகள் செய்தார் என்றால், சரியல்ல. வழக்கிற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என் அம்மா, அப்பா தான் படிக்க வைத்தார்கள். வாதி திருமணத்திற்கு முன்பு 3 வருடங்கள் St. Johns Matriculation பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்தார் என்றால், சரியல்ல. திருமணத்திற்கு பிறகும் அவர் வேலை பார்த்தார் என்றால், சரியல்ல. திருமணம் முடிந்த பிறகு தற்போது வரை வாதி பல கல்வி நிறுவனங்களில் வேலை பார்த்து வருகிறார் என்றால்,

சரியல்ல. எனது 2 வது சகோதரி அனிதா ஷெர்லி B.Sc. முடித்தவுடன் வேலைக்கு சென்று விட்டார் என்றால், இரண்டு மூன்று வருடங்கள் கழித்து வேலைக்கு போனார். தற்போதும் அவர் வேலை பார்த்து வருகிறார். வாதியின் கணவர் Wind Mil Company ல் Area Manager ஆக வேலை பார்க்கிறார். திருமணத்திற்கு முன்பே அவர் வேலை பார்த்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. வாதியின் கணவர் தென்காசியில் எனக்கும் Wind Mil ல் வேலை வாங்கி தந்தார் என்றால், சரியல்ல. நான் அந்த வேலையை 2 மாதங்களில் விட்டு விட்டேன் என்றால், சரியல்ல. அதன் பிறகு நான் சென்னையில் வேலை பார்த்தேன் என்றால், நான் சென்னையில் தான் இருந்தேன். சென்னையிலும் நான் 2 மாதங்களுக்கு மேல் வேலை பார்க்காமல், ஊருக்கு வந்து விடுவேன் என்றால், சரியல்ல. இதனால் வாதியும் அவரது கணவரும் சேர்ந்து ரூ.100,000/- செலவு செய்து என்னை வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பினார்கள் என்றால், சரியல்ல. வெளிநாட்டில் நான் வேலை பார்த்த போதும் ஒழுங்காக நான் வேலை பார்த்து பணம் எதுவும் அனுப்பியது கிடையாது என்றால், சரியல்ல. பணம் அனுப்பினேன். எனது பெற்றோருக்கு நான் அவ்வாறு வெளிநாட்டில் இருந்து பணம் வங்கியின் மூலமாக அனுப்பவில்லை. எனது தாயார் வயதானவர் என்பதால் நான் பணத்தை Agent மூலமாக நேரடியாக சேருமாறு அனுப்பி வைப்பேன். அதற்கு ஆதாரம் கிடையாது. 2010 ல் நான் வெளிநாட்டில் இருக்கும் போது எனது தகப்பனார் உயிரோடு இருந்தார். 2010 ல் எனது அம்மாவிற்கு 60 வயதுதான் என்றால், அப்பொழுது அவருக்கு கண்பார்வை மற்றும் கேட்கும் திறன் குறைவு பட்டிருந்தார். அவ்வாறு எனது தாயார் அந்த காலகட்டத்தில் உடல் நிலை பாதிக்கப்பட்டு இருக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு தவறுதலாக நேரடியாக பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு Co-operative Society ல் Loan எடுத்து 1998 ல் எனது தகப்பனார் கட்டினார் என்றால், சரிதான். 2015 ல் அந்த கடன் கட்டி முடிக்கப்பட்டது என்றால், 2015 க்கு முன்பாகவே, கடன் கட்டி முடிக்கப்பட்டது என்று என் அம்மா சொன்னார். அந்த Loan தொகையை முறையாக கட்டாததால் வாதிதான் 2015 ல் அந்த கடன் தொகையை முழுவதுமாக செலுத்தி முடித்தார் என்றால், சரியல்ல. என் அம்மாவே கடனை கட்டினார். 2005 ல் வாதிக்கு திருமணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு எனது தாயாரின் சகோதரி தங்கம் உதவிகள் செய்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. அந்த திருமணம் முடிந்து, அவருக்கு பிள்ளைகள் பிறந்த போது,

பிள்ளைகளை எனது தாயார் பராமரித்து வந்தார் என்றால், எனது அக்காவின் கணவர் கர்நாடகாவில் வேலை பார்த்ததால் எனது அக்காவும், பிள்ளைகளும் எங்கள் வீட்டில் தான் இருந்தார்கள். அப்பொழுது எனது அக்கா வேலை பார்த்தார். 1ம் பிரதிவாதி அனிதா ஷெர்லியின் திருமணத்தை வாதிதான் செய்து வைத்தார் என்றால், சரியல்ல. எனது அம்மா தான் நடத்தினார். எனது இளைய சகோதரி புனிதாவின் திருமணத்தை, 1ம் பிரதி அனிதா நடத்தி வைத்தார் என்றால், நான் சவுதி அரேபியாவில் இருந்து பணம் அனுப்பி, புனிதாவின் திருமணத்தை நடத்தினேன். 1ம் பிரதிவாதிதான் திருமணத்தை நடத்தினார் என்றாலும், நான் தவறுதலாக அவ்வாறு குறிப்பிடுகிறேன் என்றாலும், சரியல்ல. நான் அந்த திருமணத்திற்கே வரவில்லை என்றால், சரிதான். 2015ல் நான் பட்டிகை சொத்திற்கு வந்தேனா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. 2010 முதல் 2017 வரை சவுதி அரேபியாவில் இருந்தேன். விடுமுறையில் எப்பொழுது வழக்கு பட்டிகை சொத்திற்கு வந்தேன் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. 2015 நான் வழக்கு பட்டிகை சொத்தில் இருந்த போது, எனது தகப்பனார் வழக்கு பட்டிகை சொத்து வீட்டின் மூல ஆவணங்களை வாதி மற்றும் 1ம் பிரதியிடம் கொடுத்து, அவர்களுக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார் என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் மூல பத்திரங்கள் என்னிடம் இல்லை என்றால், என் வீட்டில் பீரோவில் இருந்து வாதியின் மகள் அதை எடுத்து சென்று விட்டார். எந்த வருடம், தேதியில் அவ்வாறு பத்திரத்தை எடுத்து போனார் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. இவ்வாறு மூல பத்திரத்தை எனது அக்காவின் மகள் எடுத்து சென்று விட்டார் என்பது பற்றி எனது எதிர் வழக்குரையிலோ, என் முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.